THE SPIRITUAL TOUCH STONE

[Consisting of short sententious instructions arranged under five heads, viz, warnings, reflections, self-examination, evidences of faith, and evidences of love to Christ, calculated to assist professors of religion and persons who have a knowledge of the Gospel.]

ஞானவுரைகல்.

கிறிஸ்து மார்க்க போதனைகளைக் கேட்டு அறிந்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களென்னப்பட்டவர்களுக்கும் வேண்டிய புத்தி.

முதலாம் பகுதி.

எச்சரிப்பு.

க. உன்னை உண்டாக்கிப் பரமரித்து வருகிற பராபரனை எப்பொழுதும் நினைத்து அழியாத உன்னுடைய ஆத்துமஇரட்சிப்பின்மேற் பிரதானகவலையாயிருந்தால் இரட்சிக்கப்படஎன்ன செய்வேனென்று வேண்டிக்கொள்ளுகிறாயா?

உ. இவ்வுலகம் உனக்குப் பரதேசமென்றும் உன் சீவன் நீர் மேற் குமிழி என்றும் எண்ணி மோட்சத்திலே சேரும்படியாக வகைபார்க்கிறாயா?

சு. தானேக்கு நீ இருக்கிறதும் நம்பிக்கையில்லாதிருல் வயது முதிரும்பொழுது ஆகட்டுமென்று குணப்படுதல நிறுத்தியிருந்தவர்கள்

3d, Ed. AMERICAN MISSION PRESS, JAFFNA [10,000.
1842

வரவரத் தடைகள் அதிகப்பட்டதினால் மோசம் போனார்களென்றறணருகிறாயா?

ச. நீ முதிர்ந்தவனுகியுங் குணப்படாதவனுயிருந்தால் உன் நாட்களை வீண்போக்கினபைத்தியத்தனத்துக்காக மனஸ்தாபப்பட்டுச் சீக்கிரமாய் உணர்வு அடைந்து உன்னுடைய இரட்சிப்பைத் தேடாமல் உனக்கு இன்னம் மிகுதியாயிருக்கிற கிருபையின்நாட்களை வீண்போக்கினால் உன் முடிவு மிகவும் பயங்காரமாய் இருக்குமென்று நினைக்கிறாயா?

டு. தன்பலவீனத்திலுஞ் சுகவேளையே குணப்படுவதற்குச் சவுக்கியம் என்றுங் கண்டிப்பிறந் குணப்படுவதிலும் மன உச்சாகத்தினாற் குணப்படுவது அதிக உத்தமம் என்றுமுணருகிறாயா?

சு. சில வேளைகளில் உன் நெஞ்சில் ஞான உணர்வுகள் தோற்றினால் அது உன் இரட்சகர் உன்னைக் குணப்படுதலுக்கு அழைக்குஞ் சத்தமென்றும் அதை விடாமற்றொடர்ந்து பிடிக்கவேண்டுமென்றும் எண்ணுகிறாயா?

எ. நீ குணப்படாதபடிக்கு உன் இனத்தாரும் பசாசும் எவ்வளவு தடைகளை உண்டுபண்ணினாலும் மலியாமல் அந்தத் தடைகளைச் சகிக்கும்படி செபத்திலே உறுதியாயிருந்து உன் பாவத்தின் நிமித்தம் நரகத்தில் வேதனைப்படுவதைப் பார்க்கிலும் உன் இனத்தார் சனத்தாரையும் உன் சங்கைகள் இன்பங்களையுங் கிறிஸ்துவுக்குத் தொண்டனுகும்நிமித்தம் வெறுத்துவிடுவது நல்லதென்றுஞ் சீச்கிரத்திலே உன

க்குச் சந்தோஷமும் அவைகளை வெறுத்துவி டாதவர்களுக்குத் துக்கமும் வருமென்றும் ந ம்பித் தேவபத்தியில் உறுதியாயிருக்கிறாயா?

இரண்டாம் பகுதி.

குணப்படுகிற ஒரு பாவி சிந்திக்குஞ்சிந்தனைகள்.

க. என் நல்ல சிட்டிகரும் என்னைத் தயவா யிப் பராமரிக்கிறவருமாகிய என் பராபரனை வணங்கி இதுமுதல் அவருக்குப் பயந்து அவரு டைய அடிமையாய் நடப்பேன்.

உ. இயேசுக்கிறிஸ்துவென்ற இரட்சகர் கெ ட்டுப்போன பாவிகளைத் தேடவும் இரட்சிக் கவும் வந்தாரென்பது எனக்கு மகா பெரிய ச ந்தோஷம்.

ங. ஐயோ! நான் வெகு நாளாகப் பாவவழி யிற் கவலையற்றவனாய் அலைந்து திரிந்து என் இ ரட்சிப்பின் நாளை வீண்போக்கினேனே.

ச. ஆ! என் மனச்சாட்சி என்னைக் குற்றி என் தலையின் மயிரைப் பார்க்கிலும் அநேக மான பாவக் குற்றங்களை எனக்குத் தண்டிக் காட்டுகின்றது.

ஞ. நான் துன்மார்க்கமான வார்த்தைகளை யும் பொய், கபடு, வஞ்சனை, பின்புறணி முத லிய தகாத பேச்சுக்களையும் வெகு முறை பே சினதுமுண்டு.

ஃ. கோப முகத்தைக் காண்பித்தும் அவப தித்திக்காரர் செய்கிற சடங்குகள், வேடிக்கைக ள் ஆடம்பரங்கள், அக்கிரமங்கள் பொல்லாங்குக ள் யாவற்றையுங்கண் குளிரப்பார்த்ததுமுண்டு.

எ. தேவ வசனத்தைக் கேட்கக் கோவிலுக்குப் போகாமலும் போதகர்கள் சொல்லும்புத்திகளைக் கேளாமலும் விலக்கவேண்டிய துன்மார்க்கமான விபசாரம், குடி, வெறி, சூது, விக்கிரகாராதனை, சூனியம் முதலான வைகளுக்கு மிடங்கொடுத்ததுமுண்டு.

அ. நான் செய்த இந்தப் பாவக் குற்றங்களெல்லாஞ் சருவஞ்ஞராயிருக்கிற பராபரனுக்குத் தெரிந்திருக்கிறபடியால் ஐயோ! நான் நடுநடுங்கவேண்டியது.

கூ. ஆ! கேடுள்ள பாவமே, உன்னுலே எனக்கு வருஞ் சேதத்துக்கு எண்ணில்லை. நான் இனி உன்னை மிகவும் அருவருத்து விஷமுள்ள பாம்பைக் கண்டு விலகுகிறது போலே உனக்கு விலகி ஓடிப்போவேன்.

ஙி. அளவில்லாத இரக்கமுள்ள பராபரன் எனக்கு இரங்காதேபோனுல் நிலைபரமாக நான்கெட்டுப்போகவேண்டும். ஆனாலும் நான்கெட்டுப்போகாமல் தமது ஒன்றான குமாரனைக்கொடுத்து அந்தவிதமாய் உலகத்தை நேசித்தாரே.

ஙீ. குமாரன் மேல் விசுவாசிக்கிற எவனுங் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடைவானென்று வேதத்திற் கண்டிருக்கின்றது.

ஙு. அதினுல் இயேசுவின் பாதாரவிந்தமே கதியல்லாமல் எனக்கு வேறே கதியில்லை.

ஙூ. இனி என் நாவு பொல்லாத பேச்சுக்களைப் பேசாதபடிக்கு அதை அடக்கி என் வாய்க்கு ஒரு பூட்டுப்போடுகிறதுபோலே அதைப் பத்திரப்படுத்திக்கொள்வேன்.

ரச. எல். கண்கள் பொலாங்கான வீண் ஆடம்பரங்களைப் பாராதபடிக்கு அதைக் காத்துக் கொள்வேன்.

ரடு. தற்புதிதிக்காரர் சொல்லுகிறசதியோசனைகளைக் கேளாமற்றேவ வசனத்தையும் என் போதகர்கள் சொல்லுகிற புத்திகளையுமே காது கொடுத்துக்கேட்பேன்.

ரசு. உலகப்பொருள் யாவையும் பார்ககப் பராபரனையே என் முழு மனதிலுலும் நேசித்துப் பிறரையும் என்னைப்போலே நேசித்துச் சகலருக்கும் நல்ல முன்மாதிரிகாட்டி நடக்கப் பிரயாசப்படுவேன்.

ரள. எல்லாவற்றிலும் யேசுநாதர் எனக்குமாதிரி காண்பித்தபடி மனத்தாழ்மையும் பணிந்த சிந்தையும் பொறுமையுமுள்ளவனாயிருப்பேன்.

ரஅ. நான் எப்பொழுது சாவேனென்பதை அறியாதபடியால் என் மரணத்தைத் தினந்தினம் நினைத்து அதற்கென்ன ஆயத்தம்பண்ணுவேன்.

ரக. திருபையின் காலத்தை வீணாப்போக்கின பொல்லாதவர்களின் மரணத்தை நினைக்கும்பொழுது தத்தளித்தாடுநடுங்கவேண்டும். அது என் மேலும் வாராதபடிக்கு நான் இப்பொழுதே விழிக்கவேண்டுமே.

உடு ஐயோ! பொல்லாதவர்கள் நித்திய அழுகையோடும், உபாதியோடும், பற்கடிப்போடும், கஸ்தியையும், வேதனையையும் அனுபவிப்பார்களே. அவைகளுக்கெல்லாம் நான் நீங்கலானேனேயாகில் எத்தனை பாக்கியம்.

உக. என் இயேசு நாதர் இனி நடத்தீர்க்கவந் தது செத்தவர்களெல்லாரையும் எழுப்பும்பொழுது என்னையும் எழுப்புவார்.

உஉ. அவர் என்னை எழுப்பும்பொழுது இவ்வுலகத்திலேயென் சரீரத்துக்கு வந்த நோவு, களைப்பு, துக்கம் கண்ணீர் இராமற் போய்விடும்.

உஊ. நான் மிகுந்த சந்தோஷித்தோடே என் இரட்சகருக்கு எதிர்க்கொண்டுபோய் அவரைக் காண்பேன்.

உச. நான் நீதிமான்களோடுஞ் சம்மனசுகளோடுஞ் சேர்ந்து பராபரனுடைய சமுகத்தில் வந்து அவரைத் தரிசித்துச் சந்தோஷித்தித்துக் களிகூர்ந்து என்றென்றைக்கும் வாழ்வேன். ஆ! கருத்தாவே, கிருபை செய்து இதற்கு என்னை ஆயத்தம்பண்ணியருளும்.

மூன்றும் பகுதி.

தன்னைச் சோதிக்கும்படி வினவும் விஞ்ஞாபனங்கள்.

க. நான் பண்ணும் வேண்டுதல்கள் வீண் வசனிப்பாகவும் அவை பல பல உலக எண்ணங்களுடனே கலந்ததாகவும் இருந்ததில்லையோ?

உ. நான் இடையிடையே பராபரனுடைய பரிசுத்த வசனத்தை வாசியாமல் விட்டதும் வாசிக்கும் வேளைகளில் அதை மிகவுங் கவலையற்றவனாய் வாசித்ததுமில்லையோ?

ஊ. நான் கேட்கும் பிரசங்கங்களைத் திரும்பத் திரும்பத் தியானித்து அவைகளைக் குறித்து வேண்டுதல்பண்ணுகிறது என் வாடிக்கையோ?

ச. என் சமுசாரத்தில் நான் செய்யவேண்

டிய் பிரகாரம் வேண்டுதல் முதலான வைதிக ஆசாரங்களை வழுவாமற் செய்தேனேனே?

ஞ. இன்றைக்கு நான் பராபரனுக்காக எது காரியத்தைச் செய்தேன்?

ஊ. நான் என்னுடைய நேரத்தை வீணெண்ணங்களிலும் பலனற்ற பேச்சிலும் பலனற்ற செய்கையிலும் போக்கினேனே?

எ. நல்ல கூட்டத்திற் கூடியிருந்து திருச்சபை வளரும்படிக்கான நல்ல ஆலோசனைகள் பண்ணுகிறேனே?

அ. பாவம் எனக்கொரு சுமையாயிருக்கின்றதோ?

ஈ. நான் என் தேசத்தாரின் பாவங்களுக்காகத் துக்கப்படுகிறவனாக இருக்கிறேனே?

ய. நான் பாவமென்று அறிந்தவைகளையும், பாவமென்று ஐயமாய் நினைக்கிறவைகளையுஞ் செய்தூவரவில்லையோ?

யக. நான் அடிக்கடி என் இருதயத்துக்குட் பார்த்து வீண் நினைவுகளைத் தடுக்க மனச்சாட்சி கேட்டபடி எச்சரிப்பாயிருந்தேனே?

யஉ. அகந்தை கோபம் தூரிச்சை முதலான பாவங்களுக்கு நானிடங்கொடுக்கவில்லையோ?

யஊ. நான் வீட்டிலிருக்கிறபொழுதும் வழிநடக்கிறபொழுதும், படுத்திருக்கிறபொழுதும் எழுந்திருக்கிறபொழுதும் ஆண்டவருடைய நியாயப்பிரமாணத்தைச் சிந்தித்தேனே?

யச. நற்சிந்தனையை உண்டாக்குவதான நற்காரியக்கூட்டங்களிற் பேசினேனே?

யஞ. நான் முகத்தைப்போலப்பகிரை ஆற்றி

க்கொள்ளமாத்திரமேசாப்பிடுகிறேனே, பராப
ரனுடைய மகிமைக்கென்றுசாப்பிடுகிறேனே?

ஙசு. பராபரனுடைய மகிமைக்கடுத்த காரி
யங்களைப் பேசச் சமயமிருந்தபொழுது அவை
களைப் பேசாமல் விட்டதில்லையோ?

ஙள. நான் தேவ காரியங்களிலே சுறுசுறுப்
பாயிருந்தேனே? [லையோ?

ஙஅ. ஒருவனுக்காக வஞ்சனை செய்கிறதில்
ஙக. நான் எண்ணியாகுதல் எண்ணுமலாகு
தல் பொய் சொல்லுகிறதில்லையோ?

ஙஉ. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கி
றேனே?

ஙக. ஓய்வு நாளில் உலகத்துக்கடுத்த சகலகிரி
யைகளையுஞ் சம்பாஷணைகளையுந் தவிர்ந்திருக்கி
றேனே?

ஙஉ. பரிசுத்தத்துக்கேவும் வேதத்தையும்
அதற்கடுத்த புத்தகங்களையும் அன்றி வேறொன்
றையும் ஓய்வு நாளிலே தான் வாசிக்கிறதில்லை
யோ?

ஙசு. ஓய்வுநாட்களிற் சங்கீதங்களாலும் கீர்த்
தனங்களாலும் ஞானப்பாட்டுகளாலும் ஆராதி
த்துப்பிறருக்குப் புத்திசொல்லிவருகிறேனே?

ஙச. மோட்சத்திலிருக்குஞ் சம்மனசுக்கள்
சுத்தவாளரென்னுந் தேவதாசரைப்போல நா
னும் இடைவிடாமற் பராபரனை நேசித்துந்
துதித்தும் வருகிறேனே?

ஙஞ. நித்திரைவழுத்தெழும்பினநேரத்துதா
தித்து மறுபடி நித்திரைக்குப்போகுமளவுஞ்
சத்தும் மனக்கவலையில்லாமற் சந்தோஷமாய்

தெய்வநாமத் தேவநேசத்தோடே ஆசரித்துவருகிறேமே!

நாலாம் பகுதி.

விசுவாசத்தினுடைய அடையாளங்கள்.

இயேசுக் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் அருமையுள்ளவராயிருக்கிறார். அவருடைய வார்த்தை இன்பமாயிருக்கின்றது. பாவங் கசப்பாயிருக்கின்றது. செபம் இன்பமானதாயிருக்கின்றது. தெய்வபத்தியை வளர்க்குதல் அவர்களுடைய வேலையாயிருக்கின்றது. உலகம் உடைந்த மண்பாண்டத்தைப் போலிருக்கின்றது. மரணம் அவர்களைச் சந்தோஷத்துடனே வரவழைத்துக்கொள்ளுகிற சிநேகிதனைப் போலிருக்கின்றது. தம்மை விசுவாசிக்கிறவர்களுடைய இருதயங்களில் இயேசுக் கிறிஸ்து வாசஞ்செய்கிறார். கண்கள் மோட்சத்தைத் தரிசிக்கும். பராபரனுடைய ஆவி வழிகாட்டியாயிருக்கிறார். தெய்வபயம் அவர்களைச் சுற்றியமதிலாயிருக்கின்றது. பராபரனுடைய சனங்கள் அவர்களுடைய சகோதரர்களாக இருக்கிறார்கள். பரிசுத்தம் அவர்கள் வழியாயிருக்கின்றது. மோட்சம் அவர்கள் குடியிருக்கிற வீடாயிருக்கின்றது.

ஐந்தாம் பகுதி.

இயேசுக் கிறிஸ்துவை நேசிக்கிறேமென்பதற்கு அடையாளங்கள்.

இயேசுக் கிறிஸ்துவை நேசிக்கிறவர்கள் அவரை நினைக்கவும் அவரைக்குறித்துக் கேட்கவும்

அவருடைய வேதத்தை வாசிக்கவும் பேசவும் மிகுந்த தாகமாயிருக்கிறார்கள். அவருடையகட்டளைக்குக்கீழ்ப்படிய விரும்பி அவருடைய தாசரை நேசித்துப் பாவத்தைப் பகைக்கிறார்கள். இயேசுக்கிறிஸ்துவுக்கு வரும் நிந்தை அவர்களுக்கு வரும் நிந்தையாயிருக்கின்றது. இயேசுக்கிறிஸ்துவினுடைய தாசரை நட்சத்திரங்களைப் போல எண்ணிக்கொள்ளுகிறார்கள். இயேசுக்கிறிஸ்துவுக்குட் பரிசுத்தமுள்ளவர்கள் அவர்களுடைய தோழராயிருக்கிறார்கள். இயேசுக்கிறிஸ்துவினுடைய வார்த்தை அவர்களுடைய நடபடிச்சட்டமாயிருக்கின்றன. கிறிஸ்துவினுடைய குணங்கள் சுகந்த வாசனையைக் கொடுக்கிற புட்பங்களைப்போல அவர்களுக்கு இனிமையாயிருக்கின்றன. கிறிஸ்தவர்களுடைய குணங்கள் விருட்சங்களாயிருக்கின்றன. விருட்சங்களில் எத்தனை அதிகமாக வெய்யிற் பொறுக்குமோ அத்தனை அதிகமாக அவைகளுடைய வேர் ஆழமாய்ப் போகின்றதுமன்றிப் பழங்களையும் அதிகமாய்க் கொடுக்கும்; அதுபோல நெருக்கிடையெவ்வளவோ அவ்வளவு தேவபக்தியும் அதிகப்படும். வெய்யில் கடிதாய் எறிக்கும்பொழுது மழைபெய்தாலெப்படியோ அத்தன்மைபோலப் பரிசுத்தவான்களுடைய கண்களிற் கண்ணீர் இருக்கிறபொழுது சந்தோஷமும் அவர்கள் இருதயங்களிலிருக்கும்.

முடிவுரை.

குணப்படுகிறதற்காகக் கருத்தரிடத்தில் ஆ
சாவது வந்தவர்களே அவர் தள்ளினரா? ச
த்தியவேதத்திலே கேளுங்கள், பிதாவானவர்
எனக்குக் கொடுக்கிற இயாவரும் என்னிடத்
திலே வருகிறார்கள். யோவான். சு. கூ எ. அ
ன்றியுந் தம்மாலே பராபரனைச்சேருகிறவர்க
ளுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு எப்
பொழுதும் உயிரோடேயிருக்கிறவரானதால்
அவர்களை முற்றும் இரட்சிக்க வல்லமையுள்
ளவராயுமிருக்கிறார். எபிரே. எ. உடு ஒரு
வன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பா
னம்பண்ணக்கடவன். யோவா. எ. கூ எ. ஆகாத
வன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நி
னைவுகளையும் விட்டுக் கருத்தரண்டைக்கு மன
ந்திரும்பக்கடவன், அப்பொழுது அவன் மேல்
மனதிருகுவார். நம்முடைய பராபரனண்டை
க்கே மனந்திரும்பக் கடவான். அவர் மன்னிக்
கிறதற்குத் தயவுபெருத்திருக்கிறார். எசாயா,
நிநி. எ. உங்கள் பாவங்கள் சிவேமென்றிருந்தா
லும் உறைந்தமழையைப்போல வெண்மையா
கும், அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்
தாலும் பஞ்சைப் போலாகுமென்று கர்த்தர்
சொல்லுகிறார். எசாயா. க. யஅ. அப்படியிரு
க்க, நீங்கள் பராபரனுலே தெரிந்துகொள்ள
ப்பட்டவர்களாயும் பரிசுத்தராயுஞ் சிநேகிக்க
ப்பட்டவர்களாயுமிருக்கையால் உருக்கமான இ
ரக்கத்தையுந் தயையையும் மனத்தாழ்மையை
யும் பொறுமையையும் நீடிய சாந்தத்தையும்

தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி ஒருவன் மற்றொருவன்மேல் விசனமாயிருந்தா ற் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல நீ க்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். அ ன்றியும் அவைகளெல்லாவற்றின்மேலும் அன் பைத் தரித்துக்கொள்ளக் கடவீர்கள். அதுவே பூரணசற்குணங்களை இணைக்கிற கச்சையாயிரு க்கின்றது. அல்லாமலும் பராபரனுடைய ச மாதானம் உங்கள் இருதயங்களுக்குள்ளே ஆளு கைசெய்யக்கடவது. நீங்கள் ஒரே சரீரமாயி ருக்கும்படிக்கு அந்தச் சமாதானத்திற்கு அ ழைக்கப்பட்டீர்களே நன்றியறிதலுள்ளவர்க ளாயும் இருப்பீர்களாக. கிறிஸ்துவினுடைய வ சனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாய் வாச மாயிருக்கக்கடவது சகலஞானத்தோடுஞ் சங் கீதங்களினாலும் கீர்த்தனங்களினாலும்மற்றஞா னப்பாட்டுக்களினாலும் ஒருவருக் கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு பாரப ரனை உங்களிருதயங்களிலே இனிதாய்ப்பாடுங் கள். கொ. கூ. ஐஉ—ஐஊ.

ஆவியும் மணவாளியும் வாருமென்கிறார்கள், கேட்கிறவனும்வாருமென்பானாக. தாகமாயிரு க்கிறவன் வரவும் வேணுமென்றிருக்கிறவன் ஜீ வதண்ணீரை இலவசமாய் வாங்கவுங் கடவான். அரி. உஉ. ஐக.